**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.03/2022 இன் இ.ம.எண்.02/2021 இன்**
**அ.வ.எண்.405/2018**

கனகசாந்தம்
பொது அதிகார முகவர்
K.P.காளீஸ்வரன் ... மனுதாரர்/அவசிய கட்சிகாரர்

/ எதிர் /

1) பூஞ்சோலை எஜிகேசனல் டிரஸ்ட்
அதற்காக அதன் நிர்வாக செயலாளர்
க.சு.நாகராசன்
2) வட்டாட்சியர், பொள்ளாச்சி
3) தமிழ்நாடு அரசு அதற்காக
மாவட்ட ஆட்சியர், கோவை ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 05.12.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ராம அருளரசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சு.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## ஆணையுரை

மனுதாரர்/உத்தேச தரப்பினர் சார்பாக அவரது அதிகார முகவர் வழக்கை நடத்த அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை III விதி 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் புதிதாக கட்சி சேர்க்க வேண்டிய பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவார். கடந்த 22.11.2019 தேதியில் மேற்படி கனகசாந்தம் அவருக்கு பாத்தியப்பட்ட மார்ச்சநாயக்கன்பாளையம் கிராமம், காளியப்பகவுண்டன்புதூர் ஊர்க்கட்டில் புதிய க.ச.எண்.1402, 7 பழைய க.ச.எண்.1051ல் இருக்கும் சொத்தை பொருத்து மனுதாரரை பொது அதிகார முகவராக நியமித்து பொது அதிகார பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். கனகசாந்தத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து தவறுதலாக ஊர்நத்தம் என குறிப்பிட்டுள்ளதை எதிர்மனுதாரர்/வாதி தனக்கு சாதகமாக பயன்படுத்தி கனகசாந்ததிற்கு பட்டா வழங்காமல் இருக்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, கனகசாந்தத்திற்காக அவரது அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் இவ்வழக்கை நடத்துவதற்கு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3.1) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில்,** வாதி வழக்குச்சொத்தான க.ச.1402/7ல் தனது பூஞ்சோலை அறக்கட்டளை பயன்பாட்டிற்காக கடந்த 25 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறார். மனுதாரர்/பொது அதிகார முகவர் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து சட்டத்திற்கும், நியாத்திற்கும் புறம்பாக வழக்கு சொத்தை கைப்பற்ற மனுதாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு அர்ஜுன்ராம், அருண்குமார் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். மனுதாரரின் 2வது மகன் அருண்குமார் மேற்படி கனகசாந்தத்துடன் வசித்து வருகிறார். கனகசாந்தத்திற்கு 2 மகன்கள் உள்ளநிலையில், மனுதாரரை பொது அதிகார முகவராக நியமித்து அதிகாரம் கொடுத்துள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**3.2)** மேலும், மனுதாரர்/பொது அதிகார முகவர் வழக்கு சொத்தை வாதியின் அறக்கட்டளை பயன்பாட்டில் இருந்து சட்டத்திற்கு புறம்பாக கைப்பற்ற கடந்த 08.01.2017 அன்று வாதியின்வீட்டிற்கு அடியாட்களுடன்

அத்துமீறி நுழைந்து வாதி அறக்கட்டளை நிறுவனர் க.சு.நாகராசனை தாக்கியதோடு மட்டுமல்லாமல், பொருட்களை அடித்து நொருக்கி சேதப்படுத்தியும் அதனை தொடர்ந்து வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் ஆனைமலை காவல் நிலையத்தில் புகார் அளித்து, பொள்ளாச்சி நீதித்துறை நடுவர் நீதிமனறம் எண்.1–ல் வழக்கு நிலுவையில் உள்ளது.

3.3) மேற்படி சம்பவம் நடந்த பிறகே மேற்படி கனகசாந்தம் என்பவரிடமிருந்து மனுதாரர்/பொது அதிகார முகவரால் பவர் எழுதி வாங்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் கேரளமாநிலம், பாலக்காடு மாவட்டம், சித்தூர் தாலூக்கா, மீனாட்சிபுரம் தோட்டத்துச்சாளையில் வசிக்கும் நிலையில், ஆனைமலை வட்டம் காளியக்கவுண்டன்புதூரில் வசிப்பதாக பொய்யாக கூறியுள்ளார். மனுதாரர்/பொது அதிகார முகவருக்கு வாக்குரிமை கேரள மாநிலத்திலேயே உள்ளது. மேற்படி கனசாந்தம் வழக்கு சொத்திற்கு பட்டாக்கோரி மனுதாக்கல் செய்திருப்பது உண்மையல்ல. சொத்துக்கு பாத்தியஸ்தர் வழக்கினை நடத்தினால் தான் நீதிமன்றத்திற்கு உண்மைநிலை தெரியவரும். மனுதாரர் கனகசந்தத்திற்காக வழக்கை நடத்த மனுதாரர்/பொது அதிகார முகவர் அவர்களை நியமிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என்று மேலோப்பம் செய்யப்பட்டுள்ளது.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

7) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், அசல் வழக்கில் பிரதிவாதி முன்னிலையாகாததால் வாதி தரப்பு சாட்சியம் முடிவுற்று, வாதுரைக்காக பட்டியலிடப்பட்டிருந்த நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 22.11.2019 தேதியில் மேற்படி கனகசாந்தம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொருத்து மனுதாரரை பொது அதிகார முகவராக நியமித்து பொது அதிகார பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றும், ஆகவே தன்னை உத்தேச பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவராக இருந்து வழக்கை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர் தரப்பில், கனகசாந்தத்திற்கு 2 மகன்கள் உள்ளநிலையில், மனுதாரரை பொது அதிகார முகவராக அதிகாரம் கொடுத்துள்ளது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், சொத்திற்கான பாத்தியஸ்தர் வழக்கினை நடத்தினால் தான் நீதிமன்றத்திற்கு உண்மைநிலை தெரியவரும் என்றும், எனவே, மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது அதிகார பத்திரத்தை பரிசீலனை செய்கையில், உத்தேச பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை பொறுத்து விற்பதற்கும், வேறு பாராதீனங்கள் செய்வதற்கும், இவ்வழக்கை நடத்துவதற்கும் தேவைப்படும் ஆவணங்களில் கையெழுத்து செய்வதற்கும், தனது மருமகன் என்ற அடிப்படையில் மனுதாரருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட பொது அதிகார பத்திரத்தில் சொத்தை பொறுத்து மனுதாரருக்கு பிரதிவாதி அளித்துள்ள அதிகாரங்களை பொறுத்து இந்நீதிமன்றம் மேற்கண்ட பொது அதிகார பத்திரத்தை ஒரு ஆவணமாக ஏற்றுகொள்கிறது.

**10)** மேலும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 1–ன் கீழான நோக்கங்களுக்கு மட்டுமே மனுதாரர் சார்பாக உத்தேச பிரதிவாதியால் கொடுக்கப்பட்டுள்ள பொது அதிகார பத்திரத்தை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. மேலும், மனுதாரரை பிரதிவாதி சார்பாக வழக்கு நடத்த அனுமதிப்பது வழக்கை விரைவாக முடிவு செய்ய உதவியாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு 2ம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் என்ற தகுதியின் கீழ் 2ம் பிரதிவாதி சார்பாக மனுதாரரை வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (18.12.2023) அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு</u>**
**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---------------------------------------------------------

**அசல் ஆணையுரை**

இ.ம.எண்.03/2022 இன் ஓ.எஸ்.405/2018

நாள் : 18.12.2023

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

--------------------------------------------------------